**பேச்சு - பிரிவு 2**

## முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர்

உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்களால் முத்தமிழ் வித்தகர் என்று போற்றப்படுபவர் சுவாமி விபுலாநந்தர் ஆவர். இவர் கிழக்கிலங்கையில் காரைதீவு என்னும் கிராமத்தில் 1892 இல் பிறந்தார். தமிழ் மொழி வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. சுவாமிகள் இலக்கியம், சமயம், தத்துவஞானம், அறிவியல், இசைஆராய்ச்சி முதலானதுறைகளில் ஆளுமைமிக்கவராகத் திகழ்ந்தார்.

இயல், இசை, நாடகம் எனப்படும் முத்தழிழுக்கும் அவர் ஆற்றிய சிறந்த பணிகளால் 'முத்தமிழ் வித்தகர்' எனப் போற்றப்படலானார். சுவாமிகள் செந்தமிழ், தமிழ்ப்பொழில் முதலான இலக்கிய இதழ்களில் பலஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இராமகிருஷ்ணவிஜயம், வேதாந்தகேசரி ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இப்பணிகள் இயல் தமிழுக்குச் சுவாமிகள் ஆற்றிய சேவைக்குச் சான்றுகளாகும்.

சுவாமி விபுலாநந்தர் பண்டைத் தமிழரின் யாழ் இசைக்கருவிகள் பற்றி ஆராய்ந்து எழுதிய யாழ்நூல், இசைத் தமிழுக்குச் சுவாமிகள் ஆற்றிய அரும்பணியை எடுத்துக்காட்டுகிறது. அவர் எழுதிய மதங்கசூளாமணி என்ற நாடகவியல் நூல் சுவாமிகளின் நாடகத் தமிழ்ப் பணிக்குச் சான்றாகத் திகழ்கின்றது.

சுவாமி விபுலாநந்தர் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியனவற்றில் ஆழ்ந்தபுலமை பெற்றிருந்தார். இவர் தமிழகத்தின் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் முதல் தமிழ் பேராசிரயராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர். அத்தோடுஆசிரியர், அதிபர், ஆய்வாளர், பத்திரிகை ஆசிரியர் போன்ற பல பதவிகளை வகித்த பேறிஞர் சுவாமி விபுலாநந்தர். நாமும் முத்தமிழ் கற்று வித்தகனைப் போற்றுவோம்வாரீர்.

நன்றி, வணக்கம்.